5. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 10–4–2023 (திங்கட்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு ஆகியன 12–4–2023 (புதன்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.*

12–4–2023 (புதன்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 3–நீதி நிருவாகம், 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் 33–சட்டத் துறை ஆகியன 10–4–2023 (திங்கட்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

மேலும், 13–4–2023 (வியாழக்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) மற்றும் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) ஆகியன அன்றையதினமே, அதாவது, 13–4–2023 (வியாழக்கிழமை) அன்று மாலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும். மேலும், 13–4–2023 (வியாழக்கிழமை) அன்று மாலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) ஆகியன அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் அறிவித்துக்கொள்கிறேன்.